# இந்தியத் தூதரகம்
## கொழும்பு

### ஊடக அறிக்கை

இலங்கை இந்தியா பவுண்டேசன் நிதிப்பங்களிப்பின் கீழான மாணவர் பரிமாற்றம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் புனித பத்திராசிரியர் கல்லூரி மாணவர்கள் டிசம்பர் 9 – 15ம் திகதி வரை இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் ஒன்றினை மேற்க்கொண்டிருந்தனர். இரு நாடுகளுக்கும் இடையிலான இவ்வாறான பயணங்கள் இந்தியத் துணைத் தூதரகத்தினால் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

குறித்த சுற்றுப்பயணத்தின் போது இலங்கையிலிருந்து சென்ற மாணவர்கள் Apeejay School மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் யோகா பயிற்சி நெறிகள், பொது மேடைப் பேச்சு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் போன்ற பல துறைகளில் அவர்களது மேலான நுட்பங்களை அறிந்து தெளிந்தனர். மேலும் இயற்பியல், வேதியியல், கணிணி அறிவியல், தானியங்கிகள், செயற்கை நுண்ணறிவு, 2D 3D அச்சுப்பிரதி தொடர்பான செயன்முறை விளக்கங்களில் பங்கு கொண்டனர். பின்னர் டெல்லியில் உள்ள யுனஸ்கோ வினால் உலக மரபாக அறிவிக்கப்பட்டுள்ள இடங்களைப் பார்வையிட்டனர்.

பின்னர் இலங்கை மாணவர்கள் தமது இணையான இந்திய மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் பண்பாடு மற்றும் வாழ்க்கை முறைகளைப் பற்றி அறிந்து கொண்டதுடன் இரு நாடுகளின் பண்பாடுகளை வெளிப்படுத்தும் முகமான நிகழ்வுகளிலும் பங்கு கொண்டனர். இச் சுற்றுப்பயணத்தின் இறுதியாக இருபாடசாலைகளுக்கும் இடையில் நட்புறவினைப் வலுப்படுத்தும் வகையில் துடுப்பாட்டம் மற்றும் உதைபந்தாட்டம் போட்டிகளும் இடம்பெற்றது.

இந்தியத் தூதரகமானது இதற்கு முன்னர் இத் திட்டத்தின் கீழ் கொழும்பு றோயல் கல்லூரி மாணவர்களையும் இந்தியாவின் சனாவார் லோறன்ஸ் பாடசாலை மாணவர்களையும் இரு நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் ஒன்றினை மேற்க்கொள்ள ஏற்பாடு செய்திருந்தது.

இதன் அடுத்த கட்டமாக கண்டி மற்றும் காலி மாவட்டத்திலிருந்து பாடசாலைகளைத் தெரிவு செய்வது தொடர்பாக கலந்தாய்வு இடம்பெற்று வருகின்றது. இத்தகைய நிகழ்வுகள் இரு நாடுகளுக்குமிடையில் பண்பாடு கல்வி, மக்களிடையேயான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

***

கொழும்பு
*20 டிசம்பர், 2019*